HALF YEARLY EXAM

QUESTION PAPER

ORIGINAL EXAM PAPERS

aglasem.com

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

வரலாறு

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20×1=20

1. பழங்கற்காலக் கருவிகள் முதன்முதலில் .... இல் அடையாளம் காணப்பட்டன.
   1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883
2. ஆதிச்சநல்லூர் .... மாவட்டத்தில் அமைந்தள்ளது.
   அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்
3. அஜாதசத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் .... ஆகும்.
   அ) சீவக சிந்தாமணி ஆ) அக்சரங்கசூத்திரம் இ) கஸ்பசூத்திரம் ஈ) சமணபலசுத்தா
4. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர் ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ....
   அ) பிம்பிசாரர் ஆ) அஜாதசத்ரு இ) அசோகர் ஈ) மகாபத்மநந்தர்
5. இக்சவாகுகள் .... பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.
   அ) ஆந்திரா - கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப்பகுதி ஈ) பனவாசி
6. கீழ்க்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?
   அ) புத்தசரிதம் - அஸ்வகோஷர்
   ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்
   இ) அர்த்த சாஸ்திரம் - கௌடில்யர்
   ஈ) காமசூத்திரர் - வாத்சாயனர்
7. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?
   i) உதயகிரி குகை (ஒரிசா) ii) அஜந்தா - எல்லோரா குகை (மகாராஷ்டிரா)
   iii) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா) iv) பாக் (மத்தியப் பிரதேசம்)
   அ) i ஆ) ii இ) iii ஈ) iv
8. .... என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
   அ) குந்தலா ஆ) பானு இ) அவந்தி ஈ) சர்வாகதா
9. காம்போஜம் என்பது நவீன ....
   அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா
10. இபின் பதூதா ஒரு .... நாட்டுப்பயணி.
    அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி ஈ) சீனா
11. ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
    அ) 28 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி
12. பொருத்துக:
    i) படைமுகாம் - 1. படைவீடு
    ii) புறக்காவல் படைகள் - 2. தண்டநாயகம்
    iii) தலைவர் - 3. நிலைப்படை
    iv) படைத்தளபதி - 4. படைமுதலி
    அ) 1, 3, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 2, 3, 1, 4

schools.aglasem.com
aglasem.com

13. .... கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.
அ) இராஜா கிருஷ்ண தேவ் ஆ) சுல்தான் குலி - குதுப் - உல்-முல்க்
இ) முகமது கவான் ஈ) பாமன்ஷா

14. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் ....
அ) இஸ்லாமிய ஞானி ஆ) பௌத்தத் துறவி இ) இந்துத் துறவி ஈ) சீக்கிய குரு

15. .... தனது ஆட்சியின்போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான் ஈ) ஔரங்கசீப்

16. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் ....க்கும் இடையே கையெழுத்தானது.
அ) அஃப்சல்கான் ஆ) செயிஷ்டகான் இ) ஜெய்சிங் ஈ) ஔரங்கசீப்

17. ராபர்ட் கிளைவ் .... இல் வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமை பெறச் செய்தார்.
அ) கர்நாடகப் போர்கள் ஆ) ஏழாண்டுப் போர் இ) பக்சார் போர் ஈ) பிளாசிப் போர்

18. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர்
அ) காரன்வாலிஸ் ஆ) தாமஸ் மன்றோ இ) ராபர்ட் கிளைவ் ஈ) வாரன்ஹேஸ்டிங்ஸ்

19. வேலு நாச்சியார் .... அரசருடைய மகள்.
அ) சிவகங்கை ஆ) புதுக்கோட்டை இ) இராமநாதபுரம் ஈ) பழவநந்தம்

20. தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் .... ஆவார்.
அ) இராமலிங்க அடிகளார் ஆ) காசி விசுவநாத முதலியார்
இ) அயோத்திதாச பண்டிதர் ஈ) தேவேந்திரநாத் தாகூர்

பகுதி - ஆ

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7×2=14

21. ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
22. ஜெனட் அவஸ்தாவைப்பற்றி எழுதுக.
23. ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறுக.
24. பண்டமாற்று முறையை விளக்குக.
25. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக்கூறுக.
26. ஹர்ஷர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார்?
27. திருபுறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன?
28. நாற்பதின்மர் அமைப்பு
29. தமிழ்ச் சங்கம் குறித்து எழுதுக.
30. சமூக நீதிக்கு ஜோதிபா பூலேயின் பங்கு என்ன?

பகுதி - இ

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7×3=21

31. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.
32. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
33. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு, வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.

schools.aglasem.com
aglasem.com

34. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
35. சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன்
36. மாலிக்காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
37. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன?
38. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?
39. ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள்.
40. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41. அ) திட்டமிட்ட நகரங்களான ஹரப்பா மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

42. அ) சமணத்தில் ஏற்பட்ட பிளவை விளக்குக.

(அல்லது)

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.

43. அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் அக்பர் ஆட்சி எல்லையை குறித்து கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

அ) காபூல் ஆ) ஆக்ரா இ) குஜராத் ஈ) மாளவம் உ) அலகாபாத்

44. அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக் கலை மேன்மைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?

45. அ) கோவில் - ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

(அல்லது)

ஆ) முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.

46. அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

ஆ) ஔரங்கசீப்பின் தக்காணக்கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?

47. அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத்திட்டத்தினைப் பற்றி விவரி.

(அல்லது)

ஆ) 19ம் நூற்றாண்டில் தோன்றிய சமூக - சமய சீர்திருத்த இயக்கங்கள் குறித்து காலக்கோடு வரைக.

----

schools.aglasem.com
AglaSem Earn while Learn Program. Send your papers and get paid.
Contact: support@aglasem.com
aglasem.com